A project of Community Living Toronto

# ஆட்டிசம்– பி.டி.டி. உள்ள குழந்தைகளுக்கான செயல்களை உருவாக்குவதற்கான பொது வழிமுறைகள்:

*செயல்களைகீழே தந்துள்ளபடி உருவாக்க வேண்டும்:*

1. தேவையான பொருள்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சரியான விவரங்கள் இருக்க வேண்டும்.
2. தெளிவான நன்கு புரியக்கூடிய வழிகளை கண்ணால் பார்த்து புரியும் வகையில் தாருங்கள். (உ.ம்) செயலை மாதிரி காட்டுங்கள் படங்கள், பொருள்கள் காட்டுங்கள்.
3. ஆரம்பம் மற்றும் முடிவை தெளிவாளமுறையில் தெரியப்படுத்துங்கள். (உ.ம்) முடிந்தது, எல்லாம் செய்தாயிற்று.
4. செயல்கள் குழந்தையின் திறமைக்கு ஏற்றவாறும் ஏமாற்றத்தைச் சகித்துக்கொள்ளும் மனப்பான்மைக்கு ஏற்றவாறும் இருக்கவேண்டும்.வெற்றியடைய திட்டமிட வேண்டும். (உ.ம்) குழந்தைக்கு 5 விளையாட்டு மரக்கட்டைகளைத் தந்து அடுக்கி விளையாட சொல்ல வேண்டும்.அவர் அடுக்கி முடித்தவுடன் முடிந்தது என்று கூறி மகிழ்ந்து விளையாட்டை முடியுங்கள்.மாறாக ஒரு கூடை நிறைய மரக் கட்டைகளைத் தந்து அவருக்கு இயலாததை செய்யவேண்டாம்.
5. குழந்தை புது புது செயல்களில் விருப்பம் காட்ட உதவுங்கள். (உ.ம்) குழந்தைக்கு காரில் விருப்பம் ஆனால் நீங்கள் பசில் வைத்து விளையாட பிள்ளையை தயார் படுத்தினால் கார் கொண்ட பசில் வைத்துத் தொடங்கலாம்.